செ.வெ.எண்:14/2018 நாள்:08.01.2018

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உலகச் சிக்கன நாள் விழா – 2017 முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு புத்தகங்களை பரிசாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க.லதா,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை சார்பாக மாவட்டத்தில் நடத்தப்பட்ட உலகச் சிக்கன நாள் விழா-2017 முன்னிட்டு, மாணவர்களிடையே சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் சிவகங்கை மாவட்ட அளவில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி, மற்றும் நாடகப் போட்டி ஆகியப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மாணவ/மாணவியர்களுக்கு இன்று (08.01.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதிக.லதா, இ.ஆ.ப., அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

மேலும், பள்ளி மாணவ/மாணவியர்கள் சிறுசேமிப்பு பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் எனவும், சிறுசேமிப்பு என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கும் ஒரு ஏணியாக இருக்கும் என்பதை உணர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திரு.பெனிடிக்ட் தர்மராய், மற்றும் (சிறுசேமிப்பு) திரு.சோம.செல்வராஜ் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.